# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2293/12 - 2022 අගෝස්තු මස 15 වැනි සඳුදා - 2022.08.15

2293/12 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: தி/காணி/எல்2/சுவீVI/160.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/6/2019/எச்டபிள்யூ/467.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில், உடுவ கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள, கடவெத்துவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட 2021.12.23 ஆந் திகதிய, ஆரம்ப வரைபட இல. மார. 2876 இல் துண்டு இல. 01 மற்றும் 02 இல் காட்டப்பட்டுள்ள சுமார் 0.0084 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய இரண்டு (02) காணித்துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:

01. துண்டு இல. 01

காணியின் பெயர்: பத்தலவெல்கொறட்டுவ; விபரம்: தோட்டம்; விஸ்தீரணம்: 0.0020 ஹெக்டயார்.

02. துண்டு இல. 02

காணியின் பெயர்: ஹேனவத்தை அல்லது அளுத்வத்தை; விபரம்: தோட்டம்; விஸ்தீரணம்: 0.0064 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.09.21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திஹகொட பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022.09.19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உமேஷா மாதறகே,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அலுவலர்,
திஹகொட.

பிரதேச செயலகம்,
திஹகொட,
2022, ஓகத்து 09.

EOG 08 - 0131


1A - G 37243 — 11 (2022/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*